Subscription
Inland: Rs. 50/- per year

For Advertisements
Apply to:
The Manager
Morning Star,
182, First Cross Street,
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News 89

Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 17 March 1989 No. 11
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

RECEIVED ... Library

UNDELIVERED ISSUES.
Please re-address all undelivered issues of THE MORNING STAR
TO:- The Manager,
"Morning Star"
182, First Cross Street,
JAFFNA.

## BATTICALOA UNIVERSITY.

The Vice-Chancellor of the Batticaloa University, Prof. K.D. Arulpragasam has revealed at a News Conference held at the Batticaloa Campus that a four year Para - medical course for pharmacists, Nurses etc- etc. leading to a degree (B. Sc.) will be started at the University with the help of the British Embassy. No other University in Sri Lanka has a Degree course for Para-medical personnel.

The Vipulananda Music and Dance academy now under the Provincial Council may function as an arts Faculty in the University of Batticaloa if the Ministry of Higher Education gives the green light.

## JAFFNA COLLEGE ANNEXES THE RAJAN KADIRGAMAR CRICKET TROPHY.

At the Big Match (50 overs) played at Brown Field, Jaffna College Vaddukoddai, between Jaffna College and St. Patrick's College, on 2-3-89 Jaffna College annexed the Rajan Kadirgamar trophy for the fourth year in succession. Jaffna College scored 165 runs and St. Patrick's 165 runs. The Best Performance cup was awarded to S. Shanmuganathan of Jaffna College. The Cup for all Round Excellence was awarded to S. Selvarajah of St. Patrick's College. Shabrah Finance Limited were donors of the Cups presented to the winners.

## RULE RELAXED.

It is learnt that the Ministry of Education under the Northern and Eastern Provincial Council has permitted graduate teachers from Kilinochi, Mullaitivu, Mannar and Trincomallee districts to apply for the Diploma Course in Education at the Jaffna University, relaxing the 25 miles radius rule.

Teachers who are selected from these districts for the Diploma Course will be posted for two years in schools in Jaffna to enable them to secure their Diploma at the university.

## A NEW ENGLISH COURSE.

The Distance Education Service Centre, (432, Havelock Road, Colombo 6) has ventured on a course to induce students to participate in a friendly discussion on subjects as the Cinema, Drama, Teledrama mass media and the challenges of the 21st century. These classes will be conducted by teachers qualified abroad. The course was inaugurated on 22-3-89 by Dr. Premadasa Udagama former secretary, Ministry of Education.

## THE NEW PRIME MINISTER.

Mr. D. B. Wijetunga who took his oaths of office on the 6th of March 1989, will continue to retain the Finance Portfolia.

He was first appointed the Governor of the North Western Provincial Council by President J. R. Jeyawardene and now as the Prime Minister of Sri Lanka by President Ranasinghe Premadasa. Mr. Wijetunga resigned the post as Governor of the North-Western Province to participate in the General Election.

## SCHEME TO REPLACE E.P.F.

The E.P.F. will be replaced by a new contributory Pension Scheme called the 'Social Security Benefits Scheme' which will provide Private Sector employees the same benefits as those in the public sector. With the commencement of the Scheme, the EPF member balances will be frozen. The Scheme will be administered by a Board set up under the Labour Ministry.

## NORTH — EAST MEMBERS OF PARLIAMENT.

### JAFFNA DISTRICT.

*Independents*: E. Ratnasabapathy,
S. Pararajasingam,
S. Sivamaharasan,
A. P. Selliah,
T. Loganathapillai,
S. Edward,
J. C. Raiendram,
T. Loganathapillai,
*T.U.L.F*: K. Navaratnam,
(EPRLF) K. Premachandran,
J. Yogasangari,

### VANNI DISTRICT.

*T. U. L. F.* (EPRLF): Emmanuel Antony Silva,
Rajah Kuhaneswaran,
*U. N. P*: Rasamanohari Pulendran.
*Independent*: Inasimuthu Alfred,
*Muslim Congress*: S. S. M' Abu Baker.

### BATTICALOA DISTRICT.

*T.U.L.F.*(Telo) K. Karunakaran,
*T.U.L.F.* (EPRLF) Prince Casinather,
Sam Thambimuthu,
*S.L.M.C.* A. M. Hisbulla,
*Independent*: A. Gunaseelan,.

### TRINCOMALEE DISTRICT.

*Independent*: S. Ratnarajah
K. Mathavarajah.
*U.N.P.*: M. E. H. Maharoof.
*S.L.F.P.*: M. K. de S. Gunawardena.

### DIGAMADULLA.

*S.L.M.C*: M. H. M. Ashraff,
*T.U.L.F* (ENDLF): T. N. Jeyaratnam,

## GALLERY SEATS IN PARLAIMENT.

The Speaker has announced that each Member of Parliament is entitled to five passe for observer seats in the gallery, when M.Ps. address the House. The Gallery accommodation will be restricted to 50 observers at a time.

## THE CONTROVERSIAL "ASSESSMENT" SCHEME.

It is learnt that the Continuous Assessment Scheme applicable to the G. C. E. (O/L) Examination may be scrapped. Instead, in its place there is likely to be maintained a record of the student's conduct, sense of discipline, sports attainments, qualities of leadership, religious bent etc. etc. together with marks obtained at terminal examinations and these would be made a reference point in the issues of character certificates when the student leaves school.

## THE G. C. E. (O/L) EXAMINATION, 1988.

The marking of a Total of 562,000 answer scripts of the G.C.E. (O/L) Examination 1988, old Syllabus (195,000) and New Syllabus (367,000) began on March 18 and will end on March 27 a total of 23,500 marking Examiners have been assigned for the task, with 1500 Chief Examiners.

This year after a lapse of several years, Evaluation Centres were set up at Jaffna, Kalmunai, Batticaloa and Trincomalee.

## JAMES RICHARDS.

(continued from last issue)

With great composure he took a most tender and affectionate leave of his dearest earthly friends and on the day he sailed October 23 1815 he wrote thus to his parents.

"you wish to know my feelings, I was never so anxious to commence any journey as I am to sail for Ceylon"

Rev. & Mrs. James Richards came to Jaffna in 1816 along with Rev. & Mrs. Poor and Rev. & Mrs. Meigs. (Rev. Warren arrived a few weeks earlier)

Rev. Richards died in Tellipallai in 1822 at the age of 38. After his demise Sarah Richards married Rev. Joseph Knight C. M. S. missionary in Nallur. But she also died one year after this marriage.

"During the year 1823 Mr. Knight was married to the widow of the Rev. James Richards of the American Mission. He thus speaks of his wife. "My dear partner is blessed with more than an ordinary share of health and energy of mind and having considerable acquaintance with the native language, she will be under very favourable circumstances for forwading the objects of the Mission" This union but of short continuance as Mrs. K. died in the following year."

In a letter to the parents of Mrs. Richards, after dwelling at some lengths on the loss of his health, he says

you may wish to know whether I have never been sorry that I came to India. No my dear parents I have never been sorry that I came to India. I have never been sorry that in 1808 I determined if the Lord should give me opportunity to spent my life among those who were perishing for lack of vision. At that time my mind was directed towards the aborigines of America. I have not been sorry that I came to the East instead of going to the west. There are hundreds — here are thousands. My mind has been set upon bringing this people to the knowledge of the truth. I have tried to do something for them; I have done a little. May the lord bless that little. I wish now to encourage others to come and fill the place left vacant by Brother Warren's death and my sickness. The cause is good one. It is a delightful one. It is a cause which calls for the aid of all the christian world. If my parents my brothers and my sisters were all prepared for missionary work, I would invite them all to India. Yes if they were ten times as numerous as they are, I would invite them all. Had I a thousand lives to give they should all be sacrificed in the blessed cause"

In his last letter to his parents he says,

"I must now bring this letter to a close, and what shall I say? shall I tell how it gratifies us to learn that you are so comfortable and happy in the decline of life? shall I tell you that we are more and more happy in our work and that we have never repented having engaged in it? O' how would your hearts beat with joy my dear parents, could you witness the harmony the zeal the activity the prayerfulness and the devotedness of the dear missionary brethren and sisters. And could you

( continued on page 4 )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 24,31- 03 -1989 [ இதழ் ] 11,12


## சிந்தனை 9.

மத்தேயு 25: 31-40.

**சிறுமைப்பட்டவர்கள் யாருடையவர்கள்.**

இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் யார்? என்ற கேள்வி எப்போதும் எல்லோருடைய உள்ளங்களிலும் எழுப்பப்படும் கேள்வியாகும். இக்கேள்வி எழுப்பப்படும்போது நாங்களா அவர்களா என்ற போட்டியும் கூடவே எழுந்து விசுவரூபம் எடுத்து விடுவது உண்டு.

இப்போட்டி வரும்போது தனி மனிதன் ஒவ்வொருவனும் தனித் தனியே நியாயம் தீர்க்கப்படக்கூடிய ஒரு காட்சியை இப்பகுதி நமக்கு நாடக ரூபத்தில் அமைத்துத் தருகின்றது.

பசியாய் இருந்தவர்கள், தாகத்தில் தவித்தவர்கள், மாற்று உடை இல்லாது மக்கள் முன் வராது மறைந்து வாழ்ந்தவர்கள், தீராத வியாதியால் வேதனைப்படுபவர்கள், காவலில் அடைக்கப்பட்டு, காலம் முழுவதும் சிறைச் சாலைக் கம்பிகளையே கண்டு கசந்து போனவர்கள் ஆகியோரின் வாழ்வில் பங்கு கொண்டு, அவர்களது வாழ்வில் தங்களைப் பங்காளிகள் ஆக்கிக் கொண்ட அனைவரும் இறைவனால் வரவேற்கப்படுவார்கள் - ஆசிர்வதிக்கப்படுவார்கள்.

மேற் கூறப்பட்ட இவர்கள் அனைவரும், நமது சமுகத்தில் நம்மோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள். வாழ்வின் போராட்டத்தில், தேரோட்டிகளாக இருப்பவர்களின் தேர்க்காலுக்குள்ளே நசுக்கப்படுவார்கள். நசுங்கிப் போகிற இவர்கள் இறைவனுடையவர்கள்.

இவர்களுக்கு இரங்குபவர்கள் இறைவனுக்குத் தொண்டு செய்பவர்கள் என்று திருமறை கூறுகின்றது. நம்முடைய சேவை யாருக்கு? உணருவோம்- தொடருவோம் நமது தூய பணியை. சிறுமைப்பட்டவர்களே இறைவனுடையவர்கள். இவர்களுக்கு இரக்கம் செய்பவர்களே பாக்கியவான்கள்.

சங். 41:1,

## சிந்தனை 10.

மத்தேயு 26: 6-13.

**வீண் செலவு ஏன்?**

அன்பு, கணக்குப் பார்ப்பதே இல்லை.

அன்பு, எப்போதும் அள்ளிக் கொடுக்கும் குண இயல்புடையது. அன்பை அனுபவித்த பெண் ஒருத்தி, அன்பிற்கு அடையாளமாகவும் ஆண்டவனின் மரணத்திற்கு முன்னேற்பாடாகவும் விலையுயர்ந்த தைலத்தால் கிறிஸ்துவை அபிஷேகம் செய்கிறாள். இவளின் செயல் கண்டு பரபரப்படைந்தவர்கள் ஏன் இந்த வீண் செலவு என்ற கேள்வியை எழுப்பினார்கள் - இதற்குக் காரணமும் கற்பித்தார்கள்.

இறைவனின் செயற்திட்டம் எது என்று அறிய விரும்பாத மக்கள் என்றுமே கேள்வி கேட்பார்கள். கேள்வியைத் தொடர்ந்து நடைமுறைச் சாத்தியமான ஆலோசனையும் சொல்லி நடக்கவேண்டிய செயற்பாட்டுக்குத் தடைக்கல்லாகவும் நிற்பார்கள். இத்தகைய, ஒரு கூட்டம் மக்கள், இன்றும் வாழுகின்றார்கள் - அன்றும் வாழ்ந்தார்கள். இவர்களுடைய கேள்விக்கு, கிறிஸ்து பதில் தந்து, அன்று தன்னை அபிஷேகம் செய்த பெண்ணின் பணிக்கு, மண்ணில் பெருமை தந்து நிற்கின்றார்.

சிமியோனின் இல்லத்தை நிரப்பிய இப்பெண்ணின் கொடை, விலை உயர்ந்தது மட்டுமல்ல, தரத்தாலும் உயர்ந்தது. அன்று கிறிஸ்து இவளுடைய கொடையால் மகிமைப்பட்டார். இன்று செயல்படும், கிறிஸ்துவாகிய திருச்சபை மகிமையடைய, நம்முடைய விலையுயர்ந்த கொடைகளும், தரமுயர்ந்த கொடைகளும் அவசியம் வேண்டும்.

ஏழைகள் எப்போதும் உங்கள் மத்தியில் இருக்கிறார்கள் என்று கூறிய கிறிஸ்து, நம்மோடு சேர்ந்து ஏழைகளுடன் செயற்பட, திருச்சபை வடிவாக வாழ்ந்து, கொண்டு இருக்கிறார் என்று உணர்ந்து' நம்முடைய கொடைகளால் திருச்சபை தொடரும் பணிக்கு உதவ அணி திரளுவோம். அன்று, அப்பெண் பெற்ற ஆசீர்வாதங்கள் அநேகமாக இருந்ததாலேயே, அவள் கொடையும் பெறுமதி நிறைந்ததாக இருந்தது.

இன்று நாம், இறை வரலாற்றில் பெற்ற ஆசீர்வாதங்களை, அடுக்கடுக்காக எண்ணிப் பார்த்து, நன்றி உள்ள உள்ளங்களை ஆண்டவர் கிறிஸ்துவிற்குத் தருவதற்கு அடையாளமாக, நமது கொடைகளுடன், அவர் சன்னிதானம் செல்வோம்.

குற்றமற்றதும், நிறைவானதுமான நமது கொடைகள், வறியோரின் இல்லங்களை நிரப்பும். உள்ளத்தின் நறைவோடு நாம் கொடுக்கும் கொடைகளால், செயற்படும் கிறிஸ்து வாகிய திருச்சபையும், மகிமை அடையும் என்ற நம்பிக்கையுடன் முன் செல்வோம் வாரீர்.

## நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை நினைவு நாள்.

பல ஆண்டுகளுக்கு முன், மவுன்ற் லவனியாவிலுள்ள சென்ற். தோமஸ் கல்லூரிக்கும், கொழும்பு வெஸ்லிக் கல்லூரிக்கும் இடையிலான கிறிக்கட் போட்டியில், சென்ற். தோமஸ் கல்லூரிமாணவனை ஏ. ஜே. டி. என் அவர்கள், ஒரு ஒவறில் ஐந்து சிக்ஸ் ஸேகும் ஒரு பவுண்டறியும் (ஆறு பந்துக்கு 34 ஓட்டங்கள்) அடித்துச் சாதனை படைத்தார். அதே ஏ. ஜே. டி. என் அவர்கள், சென்ற். தோமஸ் கல்லூரிக்கும் சென்ற். பெனடிக்ற் கல்லூரிக்கும் நடந்த கிறிக்கெட் போட்டியில் தமது கல்லூரி சார்பில், அடித்த பந்தொன்று (சிக்ஸ்ஸர்) சென்ற் தோமஸ் விளையாட்டு மைதான அருகால் சென்று கொண்டிருந்த புகை வண்டியின் 'கார்ட்' (Guard) வானுக்குள் விழுந்ததால், அடுத்த நாள்க்காலைதான் அப்பந்து, சென்ற் தோமஸ் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது உண்மை வரலாறு.

இத்தகைய வரலாறு படைத்த ஏ. ஜே. டி. என். அவர்களின் தந்தைதான் நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள். 1892 முதல் 1909 வரை, 1914 தொடங்கி 1925 வரை, யாழ் இந்துக் கல்லூரி அதிபராகிச் சிறப்புச் சேவையாற்றிய நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள், 1934 தொடங்கி 1935 வரை ஊர் காவல்த் துறை அரசாங்க சபை அங்கத்தவராகி, அரசியல்ச் சேவையும் செய்து மிக்க புகழுடன் விளங்கினர்.

இத்தகைய நெவின்ஸ் செல்வத்துரை அவர்களின் தந்தைதான் இன்றைய நூற்றாண்டு நினைவுநாளுக்குரிய வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை அவர்கள். 19. 03. 1989 தான். அவருடைய நினைவு நாள்.

யாழ்/சங்குவேலியில் பிறந்து, இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரியில் (முன்னர், இதன் பெயர் பற்றிக் கோட்டச் செமினறி) பயின்று 1940ல் பட்டதாரியாகி, 1840—1846 வரை மொழி பெயர்ப்பாளராகி, 1846—1855 வரை, பற்றிக் கோட்டச் செமினறியில் ஆசிரியராகி, பின்னர் சென்னை சென்று, வ்ன்ஸ்லோ தமிழ் - ஆங்கில அகராதியின் தயாரிப்புக்கு உதவிசெய்து வந்தவர் இவர்.

1887ல் தாயகம் திரும்பி, இன்றைய யாழ்/ இந்துக் கல்லூரிக்கு வித்திட்டவர் என்பது மறக்க முடியாத உண்மை. 1887ல் யாழ். 2ம குறுக்குத் தெருவில், சுதேச உயர்தர நகரப் பாடசாலை என்ற பெயரில் அவரால் நிறுவப்பட்ட பாடசாலையின் வீழ்ச்சியிலிருந்து அதனைத் தூக்கி, அதன் வளர்ச்சிக்கு நிதியுதவி செய்தவர், அவரது மாணவரில் ஒருவரான அப்புக்காத்து (வழக்கறிஞர்) சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள் அதனால் அப்பாடசாலையை, சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களிடத்தே ஒப்படைத்தார் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை அவர்கள்.

இப்பாடசாலைதான், பிற்காலத்தில் 19- 07 -1890 ல் இந்துக் கல்லூரியாக மாற்றமெடுத்தது. பெரியார், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை அவர்கள், கல்விக்குச் சிறப்புச் சேவையாற்றினார் என்பது மாபெரும் உண்மை. தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டுமன்றி, கணிதத்திலும் தர்க்க இயலிலும் புலமை வாய்ந்ததால்தான், இலக்கிய சங்கிரகம், எண்கணிதம், தமிழ்வியாகரணம், நியாய இலக்கணம், ஆங்கில - தமிழ் அகராதி ஆகிய நூல்களை வெளியிட்டு, மக்களுக்குத் தொண்டாற்றினர்.

இத்தகைய மகத்தான ஒரு சிற்பியை — வித்திய நிபுணரை 1889 மார்ச் மாதம் 19ம் நாள், நாம் இழந்து விட்டோம்,

தமிழ் கூறும் பிரதேச மக்களும் ஏனைய இனத்தாரும், அவரை நினைவுகூரத் தவறமாட்டார்கள் என்பதோடு, அவரின் பரம்பரைக்குப் புகழ்பரப்பிய மேற்குறிப்பிட்ட மற்ற இரண்டு நெவின்ஸ் மாரையும். தம் நினைவில் வைத்திருப்பார்கள் என்பதும் திடமான நம்பிக்கை.

— எம். சின்னத்தம்பி.

செய்திகள்:

### அமரர் எஸ். ஜே, வி. நினைவு நாள்.

இலங்கைத் தமிழ் மக்களின் மறைந்த தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் 91ஆம் பிறந்தநாள் இம்மாதம் 31 ஆம் நாளாகும். (31-3-89) தந்தை செல்வா அரசியலில் ஈடுபட்டவராயிருந்தும், இறுதிவரை கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாய் நின்றவர். தள்ளாத வயதிலும் தளராமல் நாள்தோறும் செபித்து வந்தவர். இம்மாதம் 31ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7-00 மணிக்கு, சுண்டிக்குளியில் உள்ள புனிதர் யோவான் ஸ்நானகன் ஆலயத்தில், நடைபெறும் நற்கருணை ஆராதனையில், தந்தை செல்வா வாழ்ந்த விசுவாச வாழ்க்கைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தப்படும்.

### மானிப்பாய். வை. எம்.சி. எ.

மானிப்பாய் வை. எம். சி. எ. தேசிய வை. எம். சி, ஏ யின் சார்பில், சென்ற ஆண்டின் இறுதியில் தலா 300 ரூபாய் பெறுமதியான விவசாயப் பொருட்களை, முதலாம் கட்டக் கடனுதவியாக 98 பேருக்கு வழங்கியது. ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்காகவும் இக்கடனுதவி கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தை திறம்பட அமுல் செய்வோருக்கு இரண்டாம் கட்டப்பண உதவி வழங்கப்படும்.

இன்று வரை 266 குடும்பங்களுக்கு ரூபா 450/- முதல் 950/- வரை பெறுமதியான உணவுப் பொருட்கள், நிவாரண உதவியாக வழங்கப்பட்டன. நோர்வேயின் உதவியுடன் இலவசப் பாடசாலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன.

### புதிய பிரதமர்.

1989 ம் ஆண்டின் புதிய பிரதமராக, உடுநுவர பாராளுமன்றத் தொகுதியைச் சேர்ந்தவரான நிதி அமைச்சர், திரு டி. வி. விஜயதுங்க அவர்கள், 6- 3 -89 திங்கட்கிழமை, தமது பதவியைப் பொறுப்பேற்றார். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், கண்டி மாவட்டத்தில் ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்ற இவர், கடந்த ஆண்டில் அரசாங்கத்தில் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சராகவும், மின்சக்தி - எரிபொருள் அமைச்சராகவும் பணியாற்றினர்.

### ஜனசவிய.

ஜனாதிபதியின் ஜனசவிய வறுமை ஒழிப்புத் திட்டத்தையும் புனர்வாழ்வுடன் சம்பத்தப்பட்ட, வேலைகளையும் இலகுவாகவும் சீராகவும் செய்யும் நோக்கோடு, ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதியும், ஆகக்கூடியது 300 குடும்பங்களை உள்ளடக்கிய பகுதியாக மட்டுப்படுத்தப்படவுள்ளது. இக்குடும்பங்களைப் பற்றி, நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பதற்காகவே, இத்திட்டம் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படவுள்ளது என்று தெரியவருகிறது. இதன்படி 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் அமைவார்.

### பதிவுப்பத்திரம்.

பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பதிவுப் பத்திரங்களிற்குரிய விண்ணப்பங்கள் 15-03-89 செவ்வாய்க்கிழமை தொடக்கம் றக்கா றோட்டிலுள்ள அலுவலகத்தில் இரு பிரிவுகளாக ஏற்றுக்கொள்ளப்படும். பதிவு இலக்கத் திகதியில்லாத விண்ணப்பங்கள், 10 ரூபாய் முத்திரையுடன் ஒரு பிரிவாகவும், மற்றையது 5 ரூபாய் முத்திரையுடன் மறுபிரிவாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### தூதுவர் டிக்ஸிற்.

இலங்கை - இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிவரும் திரு. கே. என். டிக்ஸிற் பாக்கிஸ்தானுக்கு இடமாற்றம் செய்யப்படடுள்ளார். யூக்கோஸிலேவியாவிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. பி. எம். மல்ஹோத்ராவே இலங்கை - இந்தியத் தூதுவராக நியமிக்கப்படுவார். 1987 இல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட ஜெயவர்த்தன - ராஜீவ் காந்தி ஒப்பந்தத்திற்கு முக்கியஸ்தராக இருந்த இவர், கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கை - இந்தியத் தூதுவராகப் பணிபுரிந்தார்.

**தாரகை ஒளி**

தகப்பனைத் தாயைச் சபிப்பவன் தீபம்,
காரிருள் வேளையில் அணைந்தே போகும்.

# எங்கள் கருத்து

## துன்புறும் இறைவன்!

''சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தப் போன சவுலை நோக்கி இயேசு பிரான் அன்று கேட்டார். சவுல் திடுக்கிட்டு, 'நீர் யார்?' என்றார். 'நீ துன்பப் படுத்தும் இயேசுவே நான்' என்று பதில் வந்தது. இந்த வார்த்தைகள், சவுலை வலுவாக உலுக்கி விட்டன. இதன் விளைவாக, ஒரு புது வாழ்வுக்குள் வந்தார் அவர். எந்த இயேசுவைத் துன்பப் படுத்தினாரோ, அந்த இயேசுவுடன் இணைந்து துன்பப்படுவதைப் பெரும் பேறாக எண்ணிப் பணியாற்றினார்.

உயிர்த்தெழுந்த இயேசு, ஏன் இன்றும் துன்புறுகிறார்? பவுலுக்கு இது முதலில் புரியவில்லை. பின்பு தான் புரிந்தது. அதாவது, கல்வாரிச் சிலுவையில் ஒரு சில மணி நேரங்கள் தொங்கியதுடன் இயேசுவின் சிலுவை முடியவில்லை. அவர் எல்லா மனிதருக்காகவும் இன்னும் துன்புற்றுக் கொண்டிருக்கிறார். திருச்சபையைத் தன் உடலாக அவர் ஏற்றுக் கொண்டதால் அதற்கு வரும் அத்தனை துன்பமும், தன்னையும் பாதிப்பதாக உணருகிறார் இயேசு.

உயிர்த்தெழுந்த பின்னரும் இயேசுவின் உடலில் காயங்கள் மாறவில்லை; தழும்புகள் அழியவில்லை. ஆம், இயேசு, கல்வாரிச் சிலுவையில் சில மணி நேரம் தான் வேதனைப்பட்டார். உயிர்த்தெழுந்த பின்னரும் இயேசு துன்புறுகிறார் என்பதே திருமறை கூறும் உண்மை. இயேசு பிரான், உலகத்திற்காக இன்றும் வேதனையடைந்து கொண்டிருக்கிறார் என்பதில்தான், நற்செய்தியின் முழுமையும் ஆழமும் அடங்கியிருக்கிறது.

இன்று இயேசு, குறிப்பாக நமது நாட்டிற்காகத் துன்புறுகிறார். கொடியவர், கொலைகாரர், குடிகாரர், கொள்ளைக்காரர், ஒடுக்குபவர் அனைவருக்காகவும் இயேசு துன்புறுகிறார். தனது பிள்ளைகள்—தமிழரும், சிங்களரும் அடையும் துன்பத்துடன் சேர்ந்து தானும் துன்புறுகிறார். இன்றைய சூழ்நிலையில், செய்யவேண்டியது என்ன என்பதை அறியாது சோர்ந்து போயிருக்கும் இந்நாட்டுத் திருச் சபைக்காக, அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கத் திடமணதில்லாத திருச்சபைக்காக, இயேசு துன்புறுகிறார். தனது பிள்ளைகள் அடையும் துன்பத்துடன் சேர்ந்து தானும் துன்புறுகிறார்.

இன்று, நம் நாட்டில் அமைதி காக்க வந்த இராணுவத்தை, தீவிரவாதிகளை, இந்நாட்டு இராணுவத்தை, பயந்து பேசாது தன் சுய நலனைக் கவனித்து வரும் திருச் சபையைப் பார்த்து இயேசு, ''நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?'' என்று கேட்கிறார். நமது மறுமொழி என்ன? இயேசுவோடு சேர்ந்து சிலுவையைச் சுமப்போமா? இன்று, நம் மத்தியில் செயலாற்றி வரும் இறைவனுடன், நாமும் சேர்ந்து செயலாற்றி, துன்பத்தைத் துடைக்கும் பணியில் ஈடுபடுவதே நமது கடமை.

~~~~~~~~~~~~~~~~

## ஆர்ப்பரித் தாடிடுவோம்.

**பல்லவி**

மேகங்களே மேகங்களே சேர்ந்திங்கு பாடிடுவோம்
இறைமகன் யேசு உயிர்த்து எழுந்தார் ஆர்ப்பரித் தாடிடுவோம்.

**சரணம்**

1. வானம் பணித்தது கல்லறை திறந்தது யேசு உயிர்த் தெழுந்தார்
ஞானம் உயர்ந்தது வேதம் சிறந்தது சாவினை வென் றெழுந்தார்
சேர்ந்திங்கு பாடிடுவோம் நாங்கள் ஆர்ப்பரித் தாடிடுவோம்
— மேகங் ......

2. மரணமே உந்தன் கூர்தான் எங்கே உந்தனின் ஜெயமெங்கே
மகிபனே யேசு வென்றுன்னை உயிர்த்தார் உந்தனின் கரமெங்கே
சேர்ந்திங்கு பாடிடுவோம் நாங்கள் ஆர்ப்பரித் தாடிடுவோம்
— மேகங் ......

3. உயிர்பறிக் கும்பா தாளமே சொல்லு உந்தனின் ஜெயமெங்கே
கதிர்மதி சகலதும் படைத்திட்ட இறைவனின் மகனுக்கே
ஜெயமிங்கே
சேர்ந்திங்கு பாடிடுவோம் நாங்கள் ஆர்ப்பரித் தாடிடுவோம்
— மேகங் ......

— நவாலியூர் சி. என், செல்லத்துரை.

## தச்சனின் தனயன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

''சும்மா விசர்க்கதை பேசாதை நீ. கிணத்துத் தவளை போல இருந்த உனக்கு எல்லாம் புதினமாகத் தான் இருக்கும், ஆனால் ஒண்டு சொல்லுறன், இங்கே இருக்கிற தெண்டான், பிள்ளையை இந்த மாதிரிக் கரைச்சல் படுத்த வேண்டாம். இது தானே அறுபது வயது வந்தால் வீட்டுக்கு நாய் வேண்டாம் எண்டு சொல்லுறது...

இஞ்சை... ஆரோ 'விசிற்ரேஸ்' வருகினம் போல கிடக்கு. உன்ரை குணத்தைக் காட்டி, எங்கட மானத்தை வாங்கிடாமல் வீட்டுக்குப் பின்னாலே போயிரு... போ... எழும்பு...''

பாறிக்கிழவியின் இதயத்தில் ஊசிபோலத்தைத்தது.

குமார் பின் தொடர வசந்தியும் மஜிஸ்திரேற்றின் மூத்தமகனும் சிரித்துப் பேசிக் கொண்டு உள்ளே வருகிறார்கள். 'றெக்கிறியேஷன்' கிளப் வசந்திக்குத் தேடிக் கொடுத்த நட்புகளில் இதுவும் ஒன்று.

''குட் ஈவினிங் அன்ரி...'' ''குட் ஈவினிங் கம், கம்... வந்து உட்காருங்கோ...'' வாயெல்லாம் பல்லாகச் சிரித்து வரவேற்று அவர்களுடன் அமர்ந்து கொண்டாள் திரேசம்மா. வாலிபர்கள் இருவர்கள் நடுவிலும் அமர்ந்திருந்து காலாட்டி, கலகலப்பாய்ப் பேசிக் கொண்டிருக்கும் தன் பேத்தியைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை பாறிக் கிழவிக்கு. தனது ஊன்றுகோலின் உதவியுடன் ஓர் மாமரத்தின் கீழ் அமர்ந்துவிட்டாள்.

அநாதரவாக ஏசித்துரத்தப்பட்ட கிழவியுடன் தானும் அழவேண்டும் போலிருந்தது ராணிக்கு. எப்படியேனும் அவள் வேலைக்காரியல்லவா!

''ராணி... ராணி'' என்று கூப்பிட்ட படி, பின் கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தாள் திரேசம்மா.

நிம்மியின்ரை கூட்டுக்குள்ளை நாயள் வந்து நிக்குதுகள் போலையிருக்கு. சந்நங்கேக்குது அடிச்சுத் துரத்து... ஓடு...'' இல்லம்மா, அது இன்சுப்பெற்றர் வீட்டு நாய்தான் அல்ஷேசியன். கூட்டுக்குள்ளே நிம்மியோடே நிக்குது. கிட்டப்போகப் பயமாயிருக்கம்மா...''.

வீட்டுக்குள்ளிருந்த திரேசம்மாவுக்கு ''விசிற்ரேர்ஸ்'' சென்றதன் பின், நாளாதினம் வருகின்ற 'லோப்பிறசர்' வந்தது. உடனே சிறு கணம் கீழே வீழ்ந்து படுத்தாள்.

நாளை வரும் பெரிய வெள்ளி தினத்திலும் அவளால் ஒன்றுமே செய்ய முடியாத அளவுக்கு இது நீடிக்குமோ என்று பயந்தாள். உடனே, தான் பத்திரிகையில் பார்த்த டாக்டரை அழைத்துவரும் படி ஆள் அனுப்பினாள்.

''டொக்டர்'' வருகிறார். அவரது முகமும், அழகும் ராணியைப் போலவே காட்சியளித்தன. அந்த டொக்டரின் முகத்தைப் பார்த்த பொழுதே திரேசம்மாவின் உடல் நலம் திருப்தியானது.

டொக்டருக்குச் செய்து கொண்டிருக்கும் உபசாரங்களும் உபசரிப்புகளும் எண்ணிலடங்காதவை. இந்த வேளையில் திரேசம்மா வீட்டில் தளபாடங்கள் செய்து கொண்டிருந்த சின்னப்பு ஓடிவருகிறார்.

''மகனே, மகனே, என்று சற்று நேரம் சாவிற்காகப் போராடிய திரேசம்மாவை உயிரோடெழுப்பிய தன் மகனைக் கட்டியணைக்க ஆவலோடு ஓடி வருகிறார். அவரது வியர்வை அடங்கிய உடலைக்கண்டு சினப்புற்ற திரேசம்மையார்' ''சீ... அங்கே போய் வேலை செய், இது உன்மகனா. என்னை உயிர்ப்பித்த டொக்டர் உன்மகனா? இந்த டொக்டர் தச்சன் மகனா! எனது வேலைக்காரிராணியின் அண்ணனா?''

''ஓ எவ்வளவு திறமையான வைத்தியம்'' என்று வசந்தியின் மனம் குமைந்தது.

''அம்மா, அவரைத் தடுக்காதீர்கள், அவர் என் அப்பா தான்; நான் அவர் மகன் தான். தச்சனின் மகன் தான்.

''நீங்கள், இந்தச் சிறியரில் ஒருவர்க்கு எதைச் செய்தீர்களோ அதையே எனக்கும் செய்தீர்கள்.

அன்றொரு நாள், நான் இங்கே சிறுவனாக வந்து அப்பாவுடன் நின்றிருப்பேன்; அப்பா இங்கு தச்சு வேலை செய்து, சம்பாரிக்கும் பணத்தில் எங்கள் குடும்ப ஜீவியம் நடந்தது.

சிறுவயதிலே ஐந்தாம் வகுப்புடன் ''ஸ்கொலசிப்'' கிடைத்தது. சித்தியடைந்தேன். அமெரிக்கா சென்றேன். மிசனரியின் உதவியுடன் இன்று டொக்டரானேன்.'' கள் குடும்பத்திற்கு நீங்கள் செய்த உதவிகள் என்றும் பெரியவை, ஆனாலும், உங்கள் தாயையும் தந்தையையும் கனம் பண்ணவேண்டுமென்று ஆண்டவராகிய வைத்தியர் இயேசு சொன்னார். ஆகவே என் தந்தை தச்சனாக இருந்தாலும், தச்சனுக்கு நான் தனயன் தான்.

தந்தையையும் தாயையும் கனம் பண்ணவேண்டும்'' இந்த வாக்கியம் திரேசம்மாவின் நெஞ்சைத் தாக்கியது. தனது தாயை நோக்கி நடக்கிறாள்...

~~~~~~~~

## இன்பமய வாழ்வு மேவும்.

அரசாங்கம் ஒன்றிங்கு இருக்குதையா
அந்தரத்தில் நின்றாடும் பந்தலையா
அடியென்ன நுனியென்ன என்றுகேட்டால்
அடிபிடியின் அவலத்தைத் தானே காண்போம்
எதிர்காலத் திட்டமொன்றும் இல்லாதஃது
படுபள்ளம்நோக்கியே உருளுதையா
பொதுமக்கள் சமாதானம் பேணவந்து
அதுதானே தம்முள்ளே இல்லாதேங்கிக்
கருத்தில்லாக் கதைகள்பல பேசிப்பேசித்
தெருக்கூத்து நாடகமே நடாத்துகின்றார்
பதவிஎன்ற பேராசைப் பேயால்இங்கு
தகுதியற்ற பலர்பெரிய பதவியேற்று
குருடன்றான் வழிகாட்டி யானவன்போல்
பெருமையிலார் பேரவல வழியேசெல்வார்
புரட்டுஎத்து லஞ்சம்மோசம் என்று இங்கு
எத்தனையோ எத்தனையோ கூறிடலாம்
நித்தம்இதன் நிலையோசிலேற் பனமேபோல
சத்தம்இன்று எடுக்குதுசா இல்லைஐயோ
எப்போதினி இன்பமய வாழ்வுமேவும்
எப்போதுநிலை யானஅர சாட்சி சேரும்.

~~~~~~~~

## இந்தியத் தூதுவர்.

இந்தியாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக, முன்னை நாள் கல்வி - நீதியமைச்சராகக் கடமையாற்றிய கலாநிதி நிஸங்க விஜயரட்ண நியமிக்கப்படவுள்ளார். திரு. பெருமாள் திலகரட்ண கொழும்பின் வெளியுறவு அமைச்சின் செயலாளராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்தே இவர் நியமிக்கப்படவுள்ளார்.

## பரிசுத்த வாரத்தில் ......

பரிசுத்த வாரமாகிய இந்நாட்களில் எல்லாத் திருச்சபைகளிலும் ஆராதனை நடைபெறுவது வழக்கம். அதேபோன்று, காரைநகர்த் தென்னிந்தியத் திருச்சபையிலும் பரிசுத்த வார ஆராதனை, 20- 3- 89 பரிசுத்த திங்கள் மாலை 4-30 மணிக்கு, எமது சபையின் திரைக்கப்பாற் சென்ற அங்கத்தவர்களுக்கான ''சாவு ஒரு புதுவாழ்வு'' என்ற விஷேட ஆராதனையாக இடம் பெற்றது. சபைஊழியன் வண. ஏ. வி. ஜேசுதாசன் அவர்கள் இவ்வாராதனையை நடத்தினர். யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராகிய திருவாளர் ஜி. ராஜநாயகம் அவர்கள், நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பில் நிலைத்திருப்பீர்கள் (யோவான் 15 :10) என்ற திருமறைப்பொருளில் அருளுரை வழங்குகையில், திரைக்கப்பால்ச் சென்றவர்கள், திருச்சபைக்கு ஆற்றிய சேவையையும் பாராட்டினார்கள்.
~~~~~~~~

## RIDING OUT OF THE STORM.

There is a dismal aura about contemporary events in Sri Lanka.

The Provincial Council Elections, the Presidential Elections, and the Parliamentary General Election notwithstanding, there is no cheerful sentiment among the people, noting approvingly their gains.

On the contrary, the dominant image in many parts of the country is yet the chilly reality of an unsubtle struggle between the government and some political parties and the sibling rivalry among the political parties themselves because of a lack of consensus on main issues. It is a situation which, if not resolved, may create the same set of ingredients that brewed such a sour broth in 1987.

In the North, at the time of our writing these notes, the Mullaitivu District is in the vortex of a millitary operation which has been designated OPERATION BAAZ (Uthayan: 17-3-89).

A ghostly stillness prevails according to some news reports, in the rural areas of Andankulam, Kumulumanai, Thannirmurrippu, Alampil, Semmalai, villages which the operation had emptied of its inhabitants poor and humbled masses who had left their home in search of food, shelter and security.

It is sad to reflect that these very villages were in the news as targets of military offensives, launched in the Mullaitivu District, soon after the Ministry of National Security went into high gear in the early eighties to flush out "Terrorists" in Sri Lanka.

The problem of refugees today is not a humanitarian problem but a serious political problem, affecting the peace and stability of the region. Rehabilitation Schemes to resettle refugees will be of little value unless the underlying forces that generate the refugee crisis are kept under control, and not allowed to gather strength. The "fishing triangle", Mannar, Mullaitivu and Jaffna accounted for 45 percent of the export of shrimps in normal times in Sri Lanka. (Vide Report of the Agrarian Research and Training Institute.)

The Political scene in Sri Lanka, following the Elections, is not a picture, as many would wish, of people and places rebounding after a disaster. Beneath the gaiety of having gone through a democratic process after eleven years, there appear to be barely submerged apprehensions and tensions.

Catapulted to Parliament with a package of 13 seats, following hardly any political campaign worth the name, was the Tamil Independents group, EROS, which won eight seats in Jaffna, two in Trincomalee, one in Batticaloa, one in Vanni and one nationally. This Group is yet to decide to take part in the proceedings of Parliament, having appraised President Ranasinghe Premadasa of their main problems - the 140 Tamil detenues, the North-East Provincial Council as it is presently constituted and the question of the REFERENDUM relating to the merger the most loaded word today in the Sri Lankan political lexicon.

A new political voice with an increased decibel potency after the Election is that of the Sri Lanka Muslim Congress whose leader, Mr. M. H. M. Ashraff made his debut in Parliament on 9-3-89. The birth of the East based SLMC symbolises a new ethnic identity which could tilt the scales on vital issues in the newly carved North - Eastern Region.

The SLMC leader was quick to intervene, at Puttalam when recently in a place called Manalkunthu flames were reported baling out of 93 shops (Veerakesari 16-3-89).

While a speak of hope appeared to filter over the scene, particularly in the North and East, as the North-East Provincial Council Chief Minister made a trip to New Delhi and conferred with the Indian Prime Minister in New Delhi the political climate at home has begun to be murky.

The questions raised in Parliament by those in government beaches about the purpose and outcome of the Chief Minister's visit to New Delhi, the reply given by the Foreign Minister, Ranjan Wijeratne, the indications of stresses and strains surfacing among Tamil groups represented in Parliament, underscore a political climate in the country which hurts and warps the mood of the people in the land who find that what they see now compared to what they have witnessed for the last few weeks in the political sphere is anticlimatic. Is it possible to ride out of the storm in Sri Lanka they ask, till there is a genuine confluence of forces among the Tamil Groups in Parliament and till the Provincial Council set-up in the North-East region fulfils promises made.

Too many lives and situations in Sri Lanka suggest "*a peace where there is no peace*,' in the words of Prophet Jeremiah. The restoration of peace in our streets it is now clear cannot be sought essentially through more "law and order", Peace is the produce of God's JUSTICE.

Registered as a News paper at the G. P. O., Sri Lanka under No. Q/J/104/News /89

Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 31 March 1989 and published by Rev T. THEVANESAN, 182. First Cross Street, Jaffna.

JAFFNA COLLEGE
has pleasure in inviting
you to its
ANNUAL
PRIZE — GIVING
*on*
*Wednesday 5th, April*
*at 9-30 a. m.*
PROFESSOR
A. THURAIRAJAH
VICE — CHANCELLOR,
UNIVERSITY OF JAFFNA
will be the Chief Guest
and
MRS. A. THURAIRAJAH
*will distribute the prizes.*

Vaddukoddai. 22.3.1988 — S.JEBANESAN, Principal.

JAFFNA Y. M. C. A.

POST OF PROGRAMME SECRETARY.

Applications are invited for the post of programme Secretary who should be able to organise recreational and educational programmes for the youth and Children. Ability to play musical instruments will be an added qualification. Selected Candidate has opportunities for further training locally and abroad.

Applications Close: 8th. APRIL, 1989.

Forms obtainable from the JAFFNA Y. M. C. A.

M. THAMBITHURAI,
General Secretary.

HOUSE OF HOPE,
(Home for the Disabled Children),
INUVIL.

WANTED
ASSISTANT WARDEN.

wanted a Resident Female Assistant Warden to look after disabled Children.

Ability to paly musical instruments will be an added qualification.

APPLICATIONS CLOSE; 5th, April, 1989.

APPLY to:
THE MANAGER,
House of Hope,
Inuvil,
CHUNNAKAM.

( Continued from first page. )

JAMES .........

converse with the dear native converts and be present at our sacramental tables when all our number meet around them methinks you would break out in the language of one now in heaven "Lord now lettest thou thy servant depart in peace for mine eyes have seen thy salvation".

At the grave of Mr. Richards a suitable monument is erected having an Epitaph inscribed on it in English and in Tamil.

Translation of the Epitaph in Tamil.

In memory of the Rev. James Richards A. M. American Missionary who died August 3, 1822, Aged 38 years. Reader — He came to this country to tell you that excepting through Christ Jesus there is no way to escape Hell, and obtain Heaven. Believing in this saviour he died rejoicing to hope for Eternal Happiness. Let all who read this prepare for death also.

*Source:* The Missionary Herald, August 1824,
Selkirk: Recollection, of Ceylon (1844.)

BOOKS & MAGAZINES.

Wanted by Foreign Research Organisation books, magazines and pamphlets on all subjects pertaining to Sri Lanka.

Those published in English before 1948 preferred. Immediate payment. Please write in English giving details including author, year of publication and price expected to,

ZODIAC ENTERPRISES Ltd.
227, D Galle Road,
Colombo 3.

IN CHERISHED MEMORY
of

**Robert John Thurairajah**

CALLED HOME 5TH APRIL 1986.

*Beyond the losses of this life*
*That cause us to despair,*
*There is a music from above*
*It is God's melody of love*
*That wipes away our tear.*

fondly remembered and deeply missed on this Third Anniversary of our Physical Parting, by his wife, children and their families.

5, Dutch Road,
Chavakachcheri.

CORRECTION TO Last week's "Morning Star" J. D. C. S. I. Church Chanakachcheri, Church Committee. Please add the name of the Treasurer:

T. RATNARAJAH.